ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 2018 திசெம்பர் 04

## 54வது தென்கிழக்காசிய மத்திய வங்கி ஆளுநர்கள் மாநாடு/ உயர்மட்ட ஆய்வரங்கு மற்றும் தென்கிழக்காசிய மத்திய வங்கி ஆளுநர் சபையின் 38வது கூட்டம்

இலங்கை மத்திய வங்கியானது 54வது தென்கிழக்காசிய மத்திய வங்கி ஆளுநர்கள் மாநாடு/ உயர்மட்ட ஆய்வரங்கு மற்றும் தென்கிழக்காசிய மத்திய வங்கி ஆளுநர் சபையின் 38வது கூட்ட நிகழ்வினை 2018 நவெம்பர் 29 தொடக்கம் திசெம்பர் 02 வரை கொழும்பில் நடைபெறுவதற்கு அனுசரணை வழங்கியது. இந்நிகழ்வில் தென்கிழக்காசிய உறுப்பு மத்திய வங்கிகளின் ஆளுநர்கள் மற்றும் பேராளர்கள் அத்துடன் நாணய மேலாண்மைச் சபையினரும்[1] பங்கேற்றனர். பன்னாட்டு நாணய நிதியத்தின் துணை முகாமைத்துவ பணிப்பாளர் மிட்சுஹிரோ புருசாவா முதன்மைப் பேச்சாளராக கலந்துகொண்டார்.

தென்கிழக்காசிய மத்திய வங்கிகள் நிலையமானது ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் நிதியியல், நாணய மற்றும் வங்கித்தொழில் கருமங்களில் புரிந்துணர்வினை பாரியளவில் ஊக்குவிப்பதற்கு முன்னணியான பங்கொன்றை ஆற்றுகின்றது. 1982இல் நிறுவப்பட்ட தென்கிழக்காசிய மத்திய வங்கிகள் நிலையமானது கற்றல் நிகழ்ச்சித் திட்டங்கள், ஆராய்ச்சிப் பணி மற்றும் வலையமைப்பாக்கம் என்பன ஊடாக ஆசிய பசுபிக்கின் மத்திய வங்கிகளுக்கும் நாணய மேலாண்மைச் சபைகளுக்கும் பணியாற்றுகின்றது.

இவ்வாண்டு மாநாட்டின் தொனிப்பொருள் “துரிதமான பரிணாமச் சூழலில் நாணயக் கொள்கை” என்பதாக இருந்தது. திரு. புருஷாவா ஆரம்ப உரையினை வழங்குகின்றபோது பேரண்டப் பொருளாதாரக் கூறுகளை வலுப்படுத்துவதற்கான தேவையினை மையப்படுத்தி ஆசியாவிற்கான பன்னாட்டு நாணய நிதியத்தின் நடைமுறை பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் வாய்ப்புகள் பற்றிய நோக்கு தொடர்பான கண்ணோட்டத்தினை வழங்கினார். எதிர்கால நாணய மற்றும் நிதியியல்

[1] தென்கிழக்காசிய மத்திய வங்கிகள் என்பது புருணை தாருசலாம், கம்போடியா, சீனா, இந்தியா, இந்தோனேஷியா, ஹொங்கொங் விசேட நிருவாகப் பிரிவு, கொரியா, லாவோஸ் மக்கள் சனநாயக குடியரசு, மலேசியா, மொங்கோலியா, மியன்மார், நேபாளம், பபுவா நியூகினியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், இலங்கை, சீனத் தாய்பே, தாய்லாந்து மற்றும் வியட்நாம் நாடுகளின் 19 உறுப்பினர் மத்திய வங்கிகளையும் நாணய மேலாண்மைச் சபைகளையும் அத்துடன் 8 இணை உறுப்பினர்களையும் 8 அவதானிப்பாளர்களையும் உள்ளடக்குகின்றது.

சவால்களை முறியடிப்பதற்கு ஒட்டுமொத்தமாக, ஆசியப் பொருளாதாரங்கள் மிகச்சிறப்பாக நிலைப்படுத்தப்பட்டுள்ள போதிலும் தொடர்ச்சியான விழிப்புணர்வு மற்றும் கட்டமைப்பு சார்ந்த மறுசீரமைப்புகளை ஊக்குவித்தல், முன்மதிமிக்க இறைக்கொள்கைகள், மத்திய வங்கிகளின் நம்பகத்தன்மையினைப் பாதுகாத்தல் மற்றும் பேரண்ட அதேபோன்று பேரண்ட முன்மதிமிக்க கொள்கைகள் இரண்டினதும் கலப்பொன்றின் ஊடாக வலுவான நிதி நிறுவனங்களை உறுதிசெய்தல் என்பவற்றிக்கான தேவை காணப்படுகின்றது.

மாநாடு/ உயர்மட்ட ஆய்வரங்கு மூன்று அமர்வுகளை உள்ளடக்கியிருந்தது. முதலாவது அமர்வில் எதிர்காலத்தில் நாணய வழங்கல் மீதான துரிதமான தொழிநுட்பவியல் மாற்றங்கள் மற்றும் அவற்றின் தாக்கங்கள் பற்றி ஆளுநர்கள் கலந்துரையாடினர். முதன்மைப் பேச்சாளரான, ஸ்வரிஜெஸ் ரிக்ஸ் வங்கியின் துணை ஆளுநர், திருமதி செசிலியா ஸ்கின்ஸ்லி அவர்கள் இவ்வமர்வின் போது பணம் பயன்படுத்தலில் காணப்பட்ட கணிசமான வீழ்ச்சி, மாற்றுவழி இலத்திரனியல் கொடுப்பனவு வழிமுறைகளின் அதிகரிப்பு மற்றும் மத்திய வங்கி வெளியிட்ட டிஜிட்டல் நாணய வாய்ப்புகள் பற்றிய சுவீடனின் அனுபவத்தை பகிர்ந்துகொண்டார்.

உலக வங்கி அபிவிருத்தி திட்டக் குழுப்பணிப்பாளர் முனைவர் எய்ஹான் ஹோர்ஸ் இரண்டாம் அமர்வின் முதன்மை பேச்சாளராகக் கலந்துகொண்டு நாணயக் கொள்கை கட்டமைப்புகளுக்கான தாக்கங்களை விசேடமாக மையப்படுத்தி, வளர்ந்துவரும் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களில் பணவீக்கம் மற்றும் பணவீக்க இயக்கவாற்றல்கள் தொடர்பில் தோற்றம்பெற்ற காரணிகள் பற்றி உரை நிகழ்த்தினார். ஆளுநர்கள் உள்நாட்டு துண்டல்களை விட, பாரியளவு பன்னாட்டு வழியுறுத்தல்களுடன் பணவீக்கம் பற்றிய மாறுபடுகின்ற காரணிகளின் தாக்கங்களைக் கலந்தாராய்ந்தனர். முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களில் முன்னெடுக்கப்படும் பொருளாதார மீட்சியானது உச்சளவிலான உலக விலை அழுத்தங்களுக்கு இட்டுச் செல்லுமாயின் வளர்ந்துவரும் சந்தைகளின் மத்திய வங்கிகள் எவ்வாறு எதிர்செயலாற்ற வேண்டும் என்பது கலந்துரையாடலின் மற்றுமொரு தலைப்பாக அமைந்திருந்தது.

மூன்றாவது அமர்வில் ஐஸ்லாந்து மத்திய வங்கியின் ஆளுநர் திரு. மார் கவ்முன்ட்சன் அவர்கள் சிறிய திறந்த நிதியியல் ரீதியாக ஒருங்கிணைக்கப்பட்ட பொருளாதாரமொன்றாக ஐஸ்லாந்தின் கொள்கை மாற்றமொன்றைப் பகிர்ந்துகொண்டார். துரிதமாக பரிணாமமடைகின்ற சூழல் ஒன்றில் நாணயக் கொள்கையினைப் பேணுவது பற்றிய பிராந்திய அனுபவத்தினையும் புவியியல்சார் அரசியல் இடர்நேர்வுகள், சமமற்ற வளர்ச்சி, திரட்சியடைகின்ற நிதியியல் சமமின்மைகள், நாணயக் கொள்கை பேணப்படுகின்ற அதிகளவில் அரசியல் செல்வாக்குப் பின்னணி மற்றும் மூலதனப் பாய்ச்சல் தளம்பல் போன்ற உலகப் பொருளாதாரத்தில் காணப்படுகின்ற பரந்த அபிவிருத்திகள் நோக்கில் அவற்றின் அனுபவங்களைக் கலந்துரையாடினர். அரசியல் உறுதியின்மையில் இருந்து தோன்றுகின்ற சிக்கல்கள் மற்றும் மத்திய வங்கி சுயாதீனத்திற்கான அச்சுறுத்தல் என்பன நாணய அத்துடன் நிதியியல் உறுதிப்பாடு இரண்டிற்கும் அச்சுறுத்தல்களில் மிகவும் சவால்விடுகின்ற மதிப்பீடு ஒன்றினை ஏற்படுத்தியுள்ளன என்பதுடன் உடன்பட்டனர்.

தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் ஆளுநர் சபையின் 38வது கூட்டத்தில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர். இந்திரஜித் குமாரசுவாமி தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் ஆளுநர் சபையின் புதிய தலைவராக தெரிவுசெய்யப்பட்டார்.






MONETARY POLICY IN A RAPIDLY
EVOLVING ENVIRONMENT


The SEACEN Centre
54th SEACEN GOVERNORS' CONFERENCE / HIGH - LEVEL SEMINAR
AND
38th MEETING OF THE SEACEN BOARD OF GOVERNORS
MONETARY POLICY IN A RAPIDLY
EVOLVING ENVIRONMENT
29 November - 02 December 2018